**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.05/2025**

**வழக்கு சாட்சி P.W.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரங்கம்மாள் | தொழில் | : வயோதியத்தின் காரணமாக வேலை இல்லை |
| தகப்பனார் பெயர் | : ரங்கசாமி | கணவர் பெயர் | : நல்லசாமிக்கவுண்டர் |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 75 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 04.08.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? தடபாத்தியம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு யார் சொல்லி தாக்கல் செய்தது என்றால் ? நான் சொல்லி தான் தாக்கல் செய்தது. தடத்தின் சர்வே எண் என்ன என்றால் ? சர்வே எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் ? எனது தாயார் எனக்கு எழுதிக் கொடுத்த வகையில் பாத்தியம். தாவா சொத்து 24.09.1982 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் வழியாக எனக்கு கிடைத்த சொத்து என்றால் ? சரிதான். யார் யார் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் ? பழனியம்மாள் மற்றும் நானும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். எனக்கு C பாக சொத்தும், பழனியம்மமாள் என்பவருக்கு B பாக சொத்து கிடைத்தது என்றால் ? சரிதான். எனக்கு படிக்க தெரியாது. 1982ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தை யாராவது படித்து அதை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ? ஆமாம். கேட்டு தெரிந்து கொண்டேன். பழனியம்மாளுக்கு பிரிந்த பாகம் சர்வே எண்.747 செண்ட் 7 உள்ள இடத்திற்கு நான்குமாலாக கருப்பணகவுண்டர் நிலத்திற்கும் கிழக்கு, நம்

பொதுகிழமேல் பாதைக்கும் வடக்கு, C செடியூல்தாரர், மேற்படி பேர்கள் நடந்து கொள்ளும் தென்வடல் 15 அடிக்கும் மேற்கு, இதன் 5 லக்க சொத்திற்கும், சி செடியூல் வீட்டிற்கும் தெற்கு என்று சரத்து கண்டுள்ளது என்றால் ? சரிதான். அந்த நான்குமாலில் பழனியம்மாளுக்கு பாதை பாத்தியம் உள்ளதாக எழுதப்பட்டுள்ளது என்றால் ? இல்லை. 1982ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் பொதுப்பாதையாக காட்டியுள்ளார்கள் என்றாலும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்திற்கு விரோதமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. பழனியம்மாள் எனக்கு மூத்த சகோதரி என்றால் ? சரிதான். அந்த இடத்தை வெங்கடாசலபதி என்பவருக்கு பொது அதிகாரம் எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்றால் ? ஆமாம். அந்த வெங்கடாசலபதி பொது அதிகாரத்தை பயன்படுத்தி முருகானந்தம் என்பருக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் ? சரிதான். முருகானந்தம் என்பவர் 2013ம் ஆண்டு சரவணன் என்பவருக்கு கிரையம் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் ? சரிதான். கிரையம் எழுதிக் கொடுத்த ஆவணத்தில் தென்வடல் பொதுப்பாதையாக எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் ? இல்லை. மேலே சொன்ன ஆவணங்கள் அனைத்திலும் பொதுப்பாதையாக காட்டி எழுதியுள்ள நிலையில் ஆவணத்திற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. சரவணன் 2017ம் ஆண்டு சௌத் இந்தியன் வங்கி கோயம்புத்தூரில் அடமானம் வைத்தார் என்றால் ? சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் அந்த கடனை திருப்பி செலுத்தவில்லை என்பதால் ஏலத்திற்கு வந்ததற்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தார்கள் என்றால் ? அது எனக்கு தெரியவில்லை. மேற்படி சரவணன் பணத்தை கட்டவில்லை என்பதால் வங்கியில் இருந்து ஏலம் விடப்பட்ட போது 1ம் பிரதிவாதிசெல்வராஜ் மற்றும் சக்திவேல் என்பவரும் சேர்ந்து 12.01.2021ம் ஆண்டு வங்கியின் மூலமாக கிரையப் பத்திரம் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் ? சொல்லிக் கொண்டார்கள். வங்கியில் இருந்து 1ம் பிரதிவாதிக்கு ஏலத்தின் வழியாக கிடைத்த சொத்திற்கு எழுதிக் கொடுத்த

கிரைய பத்திரத்தில் பாதையானது பொதுப்பாதை என்று நான்குமாலில் குறிப்பிட்டு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்றால் ? நான் பார்க்கவில்லை. தற்போது நீங்கள் சொல்லி தான் தெரிகிறது. நீதிமன்றத்தில் இருந்து தாவா சொத்தை பார்ப்பதற்கு நீதிமன்ற ஆணையர் வருகைபுரிந்துள்ளார்களா என்றால் ? ஆமாம். செல்வராஜ் என்பவரின் வீடு தெற்கு பார்த்த வீடு என்றால் ? ஆமாம். அந்த வீட்டிற்கு கிழக்கு பார்த்து இரண்டு கேட் உள்ளதா என்றால் ? ஆமாம். அந்த கேட்டை ஒட்டை கிழபுறத்தில் தென்வடலில் பொது பாதை உள்ளது என்றால் ? பொது பாதை கிடையாது. பாதை உள்ளது. வீடு கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் ? ஒரு வருடம் ஆகிறது. நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வீடு கட்டிக் கொண்டார் என்றால் ? ஆமாம். பொதுப்பாதை இருப்பதால் தான் கிழக்கு பார்த்து கேட் வைத்து வீடு கட்டினார் என்றாலும், அப்போது நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்றாலும் ? சரியல்ல. காவல்துறையில் புகார் கொடுத்தோமா என்றால் ? ஆமாம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரிதான். கிழக்கு பார்த்து கேட் வைத்த போது நான் தடுக்கவில்லை என்றாலும், ஏற்கனவே பிரதிவாதிகள் மீது இருந்த பகை காரணமாக நான் வேண்டுமென்றே பொதுப்பாதையை எங்களது பாதை என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. எனது சகோதரி பொதுப்பாதையை பயன்படுத்தி வந்தார் என்றால் ? இல்லை. தாவா சொத்து பூர்விக சொத்து என்றாலும், ஒரே சர்வே எண் உள்ள சொத்து என்றாலும், அதில் நானும், எனது சகோதரி பழனியம்மாளும் பாகப்பிரிவினை செய்து கொள்ளும் போது அது பொதுபாதையாக தான் காட்டி எழுதப்பட்டது என்றால் ? சரியல்ல. 1982ம் ஆண்டு முதல் எனது சகோதரி பழனியம்மாள் மற்றும் அதன் பின்னிட்டு சொத்தினை கிரையம் பெற்ற நபர்கள் மற்றும் பிரதிவாதிகள் காலம் காலமாக பிரதிவாதிகள் பொதுபாதையை தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் ? சரியல்ல. நீதிமன்ற

ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் பொதுப்பாதையை பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் ? சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த வழக்குமூலமும் எனக்கு இல்லை என்றால் ? சரியல்ல. பிரதிவாதியை பாதையில் நடக்க கூடாது என்று தொடர்ந்து இடையூறு செய்து வருகிறேன் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.04 18:56:24 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்